# சிறப்புத்தமிழ்

## மாதிரி வினாத்தாள்-1

காலம் : 2.30 மணி மதிப்பெண்:90

### பகுதி-I

பின்வரும் வினாக்களுக்கு உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக 20 X 1 = 20

1 ‘தாயே தமிழே….’ எனும் மொழி வாழ்த்துச் செய்யுளில் பயன்படுத்தப்பட்டுள்ள நான்கு சொற்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. ‘அணி’ அடிப்படையில் இவற்றுள் மாறுபட்ட சொல்

அ. தாயே ஆ. உயிரே இ. தமிழே ஈ. சேயேன்

2 மாறியிருப்பவர் யார்?

அ. நான்முகனார் ஆ. நக்கீரர்

இ) செந்நாப் போதார் ஈ. பெருநாவலர்

3. பதிற்றுப்பத்தில் ஐந்தாம்பத்தின் பாட்டுடைத் தலைவன்

அ. செல்வக்கடுங்கோ வாழியாதன்

ஆ. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

இ. கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்

ஈ. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

4 மணிமேகலையிடம் மாதவி “நிகர்மலர் நீயே கொணர்வாய்” என்றாள். இவ்வாறு கூறியதன் நோக்கம்

அ. மணிமேகலையின் துயரை மாற்றுதல்

ஆ. மாதவி மலர்களை விரும்புதல்

இ. மாதவியின் துயரை மாற்றுதல்

ஈ. இமயவரம்பன் மலரை விரும்புதல்

5. கண்ணன் அழிவிலிருந்து காக்கும் கடவுள் என உணர்த்தும் வில்லிபாரதச் செய்யுள் தொடர்

அ. முத்தருக்கெல்லாம் மூலம் ஆ. வேதமுதல்வன்

இ. சிலைக்கை விசயன் ஈ. மெய்த்தவப் படிவ வேதியன்

6. ‘குள்ளத்தில் அகத்தியராம் அறிஞர் அண்ணா’ – இவ்வடியில் உணர்த்தப்படும் அறிஞர் அண்ணாவின் பண்பு

அ. பல்துறை ஆற்றல் ஆ. இலக்கியப் புலமை

இ. அரசியல் ஆற்றல் ஈ. இலக்கண அறிவு

7. பழமொழி பயன்படுத்தப்பட்டுள்ள பாடலடி

அ. இறைக்கின்ற கிணற்றில் நீர் சுரப்பதைப் போல்

ஆ. தருகின்ற குருதியதே உயிரைக் காக்கும்

இ. மனிதனுக்கு மனிதன்தான் உதவல்

ஈ. மணிநேரம் வாழ்ந்தாலும் மற்றவர்க்காய்

8. கீழுள்ளனவற்றுள் தூய தமிழ்ச் சொல்லாட்சியைக் கொண்டுள்ளது

அ. மிதிலைப்பட்டி என்னும் ஊரை நான் எந்தக் காலத்தும் மறக்க முடியாது.

ஆ. அவருடைய பரம்பரையானது தமிழ் வித்துவான்களுடைய பரம்பரை.

இ. தமிழ்ச் சுவடிகள் பல நூற்றாண்டுகளாகச் சேகரித்து அவர் வீட்டிலே பாதுகாக்கப் பெற்றிருந்தன.

ஈ. ஒரு நாள் எங்கேயோ நெடுந்தூரமுள்ள ஓரூருக்கு ஒரு கலியாணத்திற்குப் போயிருந்தார்.

9 ஈழத் தமிழரின் பேச்சு முறையில் மலையாள ஒலிப்பு முறை கலந்துள்ளதைக் காட்டும் சொல்

அ. மனை ஆ. பேனை

இ. அவதானி ஈ. ஓடர்

கீழ்க்குறிப்பிட்டுள்ள தொடர்களில் தவறில்லாச் சொல்லாட்சியைக் கொண்டுள்ளது

அ. காந்தியடிகள் மனத்திட்பம் கொண்டவர். எனவே இறுதிவரையிலும் போராடினார்.

ஆ. விடுதலைப் போராட்டம் வெற்றி பெற்றது. எனவே மக்கள் அயராது உழைத்தனர்

இ. நாம் எல்லாரும் நல்லவரே. எனவே அவரைப்பற்றி அறிந்திருந்தோம்

ஈ. அவன் விளக்கம் தெளிவாக இருந்தது. எனவே நன்றாக விளக்கினார்.

11 இயற்கையினின்று தன் தேவைகளைப் பெற்று வாழ்ந்த மனிதன் விழிப்புணர்வு பெற்று இயற்கையை உற்றுநோக்கத் தலைப்பட்டான். அப்போது அவன் வியப்பையும் மகிழ்வையும் நன்றியுணர்வையும் பெற்றான் – இவ்வுரைப் பகுதிக்குப் பொருந்தியதைக் கீழுள்ளனவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கவும்.

அ. இயல்பு - செயல் - விளைவு

ஆ. விளைவு – செயல் - விருப்பு

இ. செயல் – மாற்றம் - விருப்பு

ஈ. மாற்றம் – விருப்பம் – செயல்

12 கீழுள்ள கூற்றுகளுள் தவறான ஒன்று

அ. ‘மணிமேகலை’ இலக்கியக் கதை மாந்தருள் ஒருவர் மாதரி.

ஆ. சதுக்க பூதம் பற்றிய குறிப்பு சிலப்பதிகாரத்துள் காணப்படுகிறது.

இ. தொல்காப்பியர் காலத்தில் சிறுதெய்வ வழிபாடு நிலவியது.

ஈ. ‘குறிஞ்சிக்கிழவன்’ என்னும் கடவுளுக்குப் பிற்காலத்தில் சுப்பிரமணியன் என்னும் பெயர் சூட்டப்பட்டது.

13 கவிதை மானுடத்தின் ஊனுயிரில் ஒன்ற வேண்டும் – இவ்வாக்கியம் பற்றிக் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளுள் சரியானது

அ. உருவகம், ஆகுபெயர் ஆகிய இரண்டு ஆட்சியும் உள்ளன.

ஆ. உருவகம், மரபுத்தொடர் ஆகிய இரண்டும் உள்ளன.

இ. உருவக ஆட்சி மட்டுமே உள்ளது.

ஈ. ஆகுபெயராட்சி மட்டும் உள்ளது.

14 கீழ்க் குறிப்பிட்டோரில் தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்

அ. கால்டுவெல் ஆ. ஜி.யு.போப்

இ. வீரமாமுனிவர் ஈ. இரேனியஸ்

15 கீழுள்ள நான்கு தொடர்களுள் எதில் சொற்பொருளைக் கொள்ளாத சொல் எடுத்தாளப்பட்டுள்ளது?

அ. மணிமேகலையைக் கற்று மகிழ்வடைந்தேன்

ஆ. மழலையர் மகிழ்வோடு விளையாடினர்

இ. வானுயர்ந்த மரங்கள் அசைந்தாடின.

ஈ. தென்றல் வீசிடச் சிந்தை மகிழ்ந்தது.

16 பொருளாகுபெயர் உள்ள பாடலடி

அ. தாமரை மலர் போன்ற செவ்வடி

ஆ. செய்யாள் உறையும் இல்லம்

இ. கார்ப் பயிர் வளர நீண்ட நாளாகும்

ஈ. நீலக்கண் நனைந்தது

17 கீழுள்ளவற்றுள் வினைக்குரிய செயப்படுபொருள் குறிக்கப்பட்டுள்ளது

அ. நேற்று வரைந்தான் ஆ. படம் வரைந்தான்

இ. விரைவாக வரைந்தான் ஈ. எனக்காக வரைந்தான்

18 கீழுள்ளவற்றுள் பொது வினையாவது

அ. வெளுத்தான் ஆ.நடந்தான் இ. படித்தான் ஈ. பார்த்தாய்

19 மாறுபட்ட இடைச்சொல் கொண்டிருப்பது

அ. அவன்போல இவன் ஆ. அவனன்றி இவன்

இ. மனத்தில் உறுதிவேண்டும் ஈ. பயனற்ற பணி

20 கீழ்வருவனவற்றுள் உரிச்சொல் <u>உணர்த்தாத தன்மை</u>

அ. தொழில் ஆ. இசை

இ. குறிப்பு ஈ. பண்பு

## பகுதி II

**பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடை தருக. வினா எண் 22-க்குக் கண்டிப்பாக விடையளிக்க வேண்டும்.** **7 X 2 = 14**

21 சரணாங்களே – இத்தொடரைப் பிரித்துப் பொருள் கூறுக.

22 'நீர்வழிப் படூஉம் புணை' – இதன் இலக்கியத் தாக்கத்தை எடுத்துக்காட்டுக.

23 மணிமேகலையின் மாண்பினைச் சாத்தனார் எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?

24 'சேற்றிலே சேர்ந்துழலும் சமுதாயம் ' என டாக்டர் சே.சாதிக் கூறுவதேன்?.

25 அழகிய சிற்றம்பலக்கவிராயர் படைத்த நூல்கள் யாவை?

26 அறிவு பெறும் ஐந்து வழிகளாகப் பாவலரேறு குறிப்பிடுவன யாவை?

27 ஆபிரகாம் பண்டிதரின் ஆசிரியர் பயிற்சி குறித்து எழுதுக.

28 முல்லை நில மக்களின் தெய்வ வழிபாடு பற்றிப் பேராசிரியர் ச.கணபதிராமன் கூறுவன யாவை?

29 பொருளாகுபெயர் என்றால் என்ன?

30 இடைச்சொல் எத்தனை வகைப்படும்?

## பகுதி – III

**பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடை தருக. வினா எண் 34-க்குக் கண்டிப்பாக விடையளிக்க வேண்டும்** **7 X 3 = 21**

31 சொல்வன்மைக்குத் திருவள்ளுவர் தரும் வரையறை யாது?

32 "சோமன்றனொரு குலத் தோன்றலன்றோ"? இங்குக் குறிக்கப்பெறும் மரபினர் பெயர்களைக் கூறுக.

33 பெண்ணின் உயர்விற்குத் தடையாக இருப்போரைக் கவிஞர் வேந்தர் வேந்தன் எவ்வாறு சாடுகிறார்?

34 பனாட்டு, பனங்கட்டி ஆகிய சொற்களைச் சான்று காட்டி கட்டுரையாசிரியர் விளக்கும் கருத்து யாது?

35 உழைப்பும் உயர்வும் குறித்துப் பாவலரேறு கூறுவன யாவை?

36 பாரதிதாசனின் ஒருமைப்பாட்டுணர்வு பற்றித் திலகவதி அவர்கள் குறிப்பது யாது?

37 ஆபிரகாம் பண்டிதரின் நினைவாக உள்ள இடங்கள் எவை?

38 'ஆறும் தருவது வினையே' – இந்நூற்பா குறிப்பிடும் ஆறனைச் சுட்டுக.

39 வஞ்சிப்பாவின் இனங்களைக் குறிப்பிடுக.

40 நீ படித்துச் சுவைத்த ஓர் ஐக்கூ கவிதையைக் குறிப்பிடுக.

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக** 7 X 5 = 35

41 'தாயே..' எனத் தொடங்கும் மொழி வாழ்த்துப்பாடலை அடிபிறழாமல் எழுதுக.

(அல்லது)

'ஒழுக்கம்….' எனத்தொடங்கும் குறளையும் '…சொல்' என முடியும் குறளையும் அடிபிறழாமல் எழுதுக.

42 திருக்குறளில் "பிரிவாற்றாமை" எனும் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக. (அல்லது)

கண்ணனின் பெருமைகளை வில்லிபுத்தூரார் எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?

43 ஈழத்தமிழ் மக்கள் பேச்சிலுள்ள தனித்தன்மையான சொல், தொடர் வழக்குகளை விளக்குக. (அல்லது)

சிறுதெய்வ வழிபாட்டு முறை பண்டைக் காலத்தில் நிலவியதைப் பேராசிரியர் ச.கணபதிராமன் எவ்வாறு நிறுவுகிறார்?

44 திலகவதி அவர்களின் மொழிநடைச் சிறப்பினை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(அல்லது)

ஆபிரகாம் பண்டிதரின் இசைப்பணி குறித்து எழுதுக.

45 எவையேனும் மூன்று ஆகுபெயர்களைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

பிறிதுமொழிதல் அணியை விளக்குக.

46 கார்நாற்பது, களவழி நாற்பது – விளக்குக.

(அல்லது)

கம்பராமாயணத்தின் இலக்கியச் சிறப்புகள் யாவை?

47 'செம்மொழித் தமிழ்' – இத்தொடரை விளக்கிக் கட்டுரை வரைக.

(அல்லது)

நும் ஊரில் நூலக வசதி வேண்டி உரிய அலுவலருக்கு ஒரு விண்ணப்பம் வரைக..